**O.S.No.94/2015**

**Date:27.08.2019**

**வா.சா.1 – ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் அம்மா பெயர் என்ன என்றால் ஆயி ஆகும். முழுப் பெயரே ஆயிதானா என்றால் ஆயிதான். கருப்பணன் அம்பலம், வெள்ளச்சி ஆகியோர் யார் என்றால் என் அம்மாவின் பெற்றோர் ஆவார்கள். கருப்பணன் அம்பலத்தின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கருப்பணன் அம்பலத்திற்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் பொட்டையம்மாள், ஆயி மற்றும் ஆண்டிச்சி ஆகிய மூன்று பெண் குழந்தைகள் ஆவார்கள். ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களா என்றால் இல்லை. கருப்பணன் அம்பலத்திற்கும், வெள்ளச்சிக்கும் மேற்படியார்கள் மூவரும்தான் வாரிசு என்பதைக் காட்டக்கூடிய வாரிசு சான்றிதழ் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் யார் என்றால் 1ம் பிரதிவாதி பானுமதி, பொட்டையம்மாளின் மகள் அய்யம்மாளின் மகள் ஆவார், 2ம் பிரதிவாதியானவர் ஆண்டிச்சி என்பவரின் மகன் ஆவார். 3ம் பிரதிவாதி யார் என்றால் அவரும் ஆண்டிச்சி என்பவரது மகள் ஆவார். அய்யம்மாளுக்கு பானுமதி மட்டும்தான் வாரிசு என்பதற்கான வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆண்டிச்சிக்கு 2, 3 பிரதிவாதிகள் மட்டும்தான் வாரிசு என்பதற்கான வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் அம்மா எந்த வருடம் இறந்தார் என்றால் எனது பெற்றோர் எனக்கு ஐந்து வயது இருக்கும் போதே இறந்து விட்டனர். என் பெற்றோருக்கு எப்போது திருமணமானது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தாவின் பெயரும் எனக்கு தெரியாது, அதைப் பற்றி யாரிடமும் கேட்டும் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து எந்த சர்வே எண் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் சர்வே எண்.382ல் கட்டுப்பட்டது ஆகும். சர்வே எண்.382 என்பது பெரிய விஸ்தீரணம் கொண்ட இடம் என்றால் சரிதான். சர்வே எண்.382-ன் மொத்த விஸ்தீரணம் குறிப்பாக எவ்வளவு என்றால் தெரியாது. சர்வே எண்.382 என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட விபரம் எனக்குத் தெரியுமா என்றால

**O.S.No.94/2015, Date:27.08.2019**

**வா.சா.1 – ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**

**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தெரியாது. அவ்வாறு உட்பிரிவு செய்யும் போது தாவாச் சொத்து எந்த காலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என் பெற்றோர் இறந்த பின்னர், நான் யாருடைய பராமரிப்பில் இருந்து வந்தேன் என்றால் என் உடன் பிறந்த அண்ணன் ராஜேந்திரன் மற்றும் அக்காள் ராஜம்மாள் ஆகியோரின் பராமரிப்பில் இருந்தேன். அவர்கள் தற்போது எங்கே இருக்கிறார்கள் என்றால் எனக்கு எட்டு வயது இருக்கும் போதே அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள். மேற்படியார்கள் இருவரின் இறப்புச் சான்றிதழ் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றாலட 99 செண்டு புஞ்சை நிலம் ஆகும். அந்த 99 செண்டு ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டிருந்தது என்றால் எனது தாயாரைப் பெற்ற தாயாரான வெள்ளச்சிக்குப் பாத்தியப்பட்டிருந்தது. அந்த வெள்ளச்சிக்கு தாவாச் சொத்து எப்படி கிடைக்கப் பெற்றது என்றால் மேற்படி வெள்ளச்சிக்கு தகப்பனார் வழி பூர்வீகச் சொத்து ஆகும். வெள்ளச்சியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நாளது தேதி வரை வெள்ளச்சியின் அப்பா பெயரை நான் கேட்டும் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வெள்ளச்சி பெயரில்தான் தாவாச் சொத்து முழுவதும் பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டாவானது வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கூட்டப்பட்டாவாக தின்னார்கோனார் மகன் முனியாண்டி மற்றும் விஜயன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவினை நிரூபிப்பதற்கு வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 2ம் பிரதிவாதி ராஜமாணிக்கம், 4, 5 பிரதிவாதிகளுக்கு 20 செண்டு விற்பனை செய்துள்ளார் என்று சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். மேற்கண்டவாறு 20 செண்டு 4, 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்டதற்கான கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**O.S.No.94/2015, Date:27.08.2019**

**வா.சா.1 - ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**
**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராஜமாணிக்கமும், பானுமதியும் சேர்ந்து 6ம் பிரதிவாதியான ரேகா என்பவருக்கும், 7ம் பிரதிவாதியான அண்ணாத்துரைக்கும் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரங்கள்தான் நான் வா.சா.ஆ.5, 6 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சாஆ.6 ஆவணத்தில் சொத்து விபரத்தின் நான்குமாலில் கிழக்கே ரீசர்வே எண்.382-2ல் கட்டுப்பட்ட ஆட்டுக்காரர்கள் வீட்டுக்குப் போகும் பாதையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 2ம் பிரதிவாதி ராஜமாணிக்கம் 4, 5 பிரதிவாதிகளுக்கு எந்த ஒரு கிரையப் பத்திரமும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு 2ம் பிரதிவாதி, 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவாச் சொத்து எங்களுக்குப் பூர்விகப் பாத்தியப்பட்டு, கூட்டு அனுபவத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தை யார், யார் கூட்டாக அனுபவம் செய்து வந்துள்ளோம் என்றால் பொட்டையம்மாள், ஆண்டிச்சி மற்றும் நான் ஆகிய மூவரும் சேர்ந்து நாளது தேதி வரை தாவாச் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம், அவர்கள் வீட்டில்தான் நான் வளர்ந்தேன். தாவாச் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்துள்ளதை நிரூபிக்கும் வகையில் பொட்டையம்மாள், ஆண்டிச்சி மற்றும் எனது பெயரிலான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முனியாண்டி மற்றும் விஜயன் ஆகியோர் தாவாச் சொத்தில் வீடு கட்டியுள்ளனர் என்றால் ஆட்டுக்கிடை மற்றும் வீடு அமைத்துக் குடியிருந்து வருகிறார்கள். சுமார் எத்தனை வருடத்திற்கு முன்பாக அங்கு வீடு கட்டியிருப்பார்கள் என்றால் சுமார் 15 வருடம் இருக்கும். மேற்படி இடத்தில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதா என்றால் அதை நான் பார்த்ததில்லை. அந்த வீட்டிற்குச் செல்வதற்கு வெள்ளரிப்பட்டி பஞ்சாயத்தில் இருந்து சிமிண்ட் ரோடு அமைக்கப்பட்டுள்ளதா என்றால் மண் பாதை அமைக்கப்பட்டுள்ளது, ஆனால் அதை பஞ்சாயத்து போட்டுள்ளதா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் அந்த இடத்திற்குச் சென்று எவ்வளவு நாள் இருக்கும் என்றால் சுமார் ஒரு வருடம் இருக்கும். நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் தெற்குத் தெருவில்

**O.S.No.94/2015, Date:27.08.2019**

**வா.சா.1 - ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**
**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குடியிருக்கிறேன்.தெற்குத்தெருவிற்கும், வெள்ளரிப்பட்டிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் இரண்டரை மைல் இருக்கும். நான் விவசாயி என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 4 மற்றும் 5 பிரதிவாதிகள் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளனர் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். தாவாச் சொத்தில், யார், யார் எவ்வளவு செண்டு விற்பனை செய்துள்ளனர் என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்றால் முடியாது. அண்ணாத்துரைக்கு கிரையம் செய்து கொடுத்த வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் எனது தாயார் ஆண்டிச்சிக்கு வாய்க்கிரால் பாகமாக கிடைக்கப் பெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு தாவாச் சொத்தின் முழு விபரமும் தெரியாது என்றாலும், அது ஆரம்பத்தில் யாருக்குப் பாத்தியப்பட்டு, யாருடைய பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவுகள் ஏற்பட்டிருந்தது, அதை யார் தனித்து அனுபவித்து வந்துள்ளனர், அதை யார், யாருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர் போன்ற முழு விபரமும் எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல. முனியாண்டி, விஜயன் எந்த வருடம் கிரையம் பெற்றனர் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் ராஜமாணிக்கத்திடமிருந்து கிரையம் பெற்ற விபரம் மட்டும் தெரியும். வருடம் தெரியாது. முனியாண்டி, விஜயன் ஆகியோர் ராஜமாணிக்கத்திடமிருந்து எந்த ஒரு கிரயமும் பெறவில்லை என்றால் சரியல்ல, நான்குமால் தவறுதலாக போட்டு பொதுச் சொத்தை விற்று விட்டார்கள். முனியாண்டி கிரயம் பெற்ற சொத்தை வங்கிக்கு அடமானம் வைத்திருந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து பூர்வீகத்தில் யார் பெயருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியாமல் இந்த வழக்கை எனக்கு மட்டும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக கூறி பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கக்கப்பன் அம்பலம் யார் என்று தெரியுமா என்றால் என் அம்மாவின் அம்மாவிற்கு பங்காளி முறை ஆவார். தாவாச் சொத்து எந்த காலத்திலும் என் கூட்டு அனுபவத்திலோ, 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவத்திலோ இருந்ததில்லை என்றாலும், தாவாச் சொத்துக்கு நான்தான் வாரிசுதாரர் என்பதற்கு ஆவணம்

**O.S.No.94/2015, Date:27.08.2019**

**வா.சா.1 – ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**
**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 4 மற்றும் 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற தேதியிலிருந்து, வீடு, ஆட்டுக்கிடை அமைத்தும், மின் இணைப்பு பெற்றும், வரி செலுத்தியும், பட்டா பெற்றும் கால வரம்பிற்கும் மேலாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ராஜமாணிக்கம்தான் சொத்தை தவறாக விற்று விட்டார். ராஜமாணிக்கம் தவறாக விற்றதாக கூறப்படும் விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் சுமார் ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பாக தெரிய வந்தது. எப்படி தெரிய வந்தது என்றால் ஊரில் உள்ள நபர்கள் பேசியதை வைத்து தெரியும். ஏழு வருடத்திற்கு முன்பாக என்றால் 2012ம் வருடம் இருக்குமா என்றால் இருக்கலாம். வெள்ளச்சி அம்மாளுக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவ்வாறு யாருக்கும் எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை. 1968ம் வருடம் வெள்ளச்சி என்பவர் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அது தெரியாமல் இந்த வழக்கை நான் பொய்யாக பாகப் பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, அந்த உயில் ஆவணம் போலியாக தயார் செய்தது ஆகும். யார் போலியாக தயார் செய்தது என்றால் 1ம் பிரதிவாதி பானுமதி தயார் செய்தார். அந்த பானுமதிக்குத்தான் எனது வழக்கறிஞர் ஏற்கனவே வழக்கறிஞராக இருந்து, ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது. எந்த வருடம் பானுமதி பொய்யாக உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிய வந்தது என்றால் சுமார் 7 வருடத்திற்கு முன்பாக தெரிய வந்தது. தற்போது முனியன், விஜயன் ஆகியோர் பெயர்களில் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என்று நீதிமன்றத்தில் பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து பற்றிய உண்மை நிலை எதுவும் எனக்குத் தெரியவில்லை என்றாலும், எனவே நான் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் தாவாச் சொத்தின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றாலும், ஆனால் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக

**O.S.No.94/2015, Date:27.08.2019**

**வா.சா.1 - ராமச்சந்திரன், த/பெ.ஆண்டி**
**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

காண்பித்து அதற்குரிய நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றாலும், அவ்வாறு நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற தேதியிலிருந்து, நாளது தேதி வரை எவ்வித இடைஞ்சலும், இடையூறும் இன்றி, கிரையம் பெற்ற சொத்துக்களை தனித்த அனுபவத்தில் வைத்து வீடு கட்டி குடியிருந்து வருவதால், எனக்கு இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை